மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

புறநானூற்றில் உரிச்சொற்களின் பயன்பாடு – ஓர் ஆய்வு

A Study on The Usage of 'Urichol' Particle's Defining Functions in Purananuru

Jagathambigai Chandrasegaran / ஜகதாம்பிகை சந்திரசேகரன்[1]

Manonmani Devi M.A.R Annamalai / மனோன்மணி தேவி அண்ணாமலை[2]

[1]Postgraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia.

[2]Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia.

Date of Submission: 26-08-2025
Date of Acceptance: 30-10-2025
Date of Publication: 20-12-2025
Corresponding Author's Email:
manonmanidevi@fbk.upsi.edu.my

ஆய்வுச் சுருக்கம்

எட்டுத்தொகை நூல்களில் இடம்பெற்றுள்ள நூல் புறநானூறு. புறவாழ்க்கையைப் பற்றிக் கூறும் நானூறு செய்யுள்களைக் கொண்டமைந்த நூலானது புறநானூறு. இந்த ஆய்வு புறநானூறு பாடல்களில் காணப்படும் உரிச்சொற்களையும் அவற்றின் பயன்பாடுகளையும் விளக்கிக் கூறுவதே நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆய்வாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து பாடல்களை மையப்படுத்தியே இந்த ஆய்வு அமையும். புறநானூறு பாடல்களில் காணப்படும் உரிச்சொற்களின் பொருள் பண்புசார் முறையில் விளக்கப்பட்டுள்ளது. புறநானூற்று பாடல்களில் உரிச்சொற்களின் பயன்பாட்டினை கன்டறிவது இவ்வாய்வின் கண்டுபிடிப்பாக அமைகிறது. மொத்தம் 400 பாடல்கள் கொண்ட புறநானூற்றில் 10 பாடல்களில் உரிச்சொல் பயன்பாடு கண்டறியப்பட்டன.

கருச்சொற்கள் : சங்க இலக்கியம், புறநானூறு, உரிச்சொல்

Abstract

Purananuru is one of the Ettuttokai Compilation from the eighteen books of classical Tamil Literature. Purananuru is a literary work comprising four hundred poems that speak about external life (puram). This study aims to explain the Urichol found in Purananuru poems and their usages. The research will focus on ten selected poems only. The meaning of the Urichol found in the Purananuru poems was explained using a qualitative approach. This study helps in understanding the meaning of the Urichol that appear in Purananuru.

Keywords : Classical Tamil Literature, Purananuru, Urichol

முன்னுரை

சங்க இலக்கியங்களை அகம், புறம் என இருவகையில் பிரிக்கலாம். காதலைப் பற்றிப் பாடும் பாடல்களை அகம் என்றும், காதலைத் தவிர்த்துப் பிற செய்திகளைப் பாடும் பாடல்களைப் புறம் என்றும் கூறுவர். புறப்பாடல்கலானது அகப்பாடல்களைப் போல பெரும்பாலும் கற்பனையாகப் பாடப்பட்டதல்ல. மாறாகச், சங்க கால வரலாற்றை உள்ளடக்கிய பொருட்டே புற இலக்கியப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. (கௌசல்யா, 2023).

அவ்வகையில், இம்மாதிரியான புறவாழ்க்கையைப் பற்றிக் கூறும் நானூறு செய்யுள்களைக் கொண்டமைந்த நூலானது புறநானூறு . இந்நூல் பல புலவர்களால் எழுதப்பட்டது. 400 பாடல்கள் இந்நூலில் அடங்கியுள்ளது. பாடல்கள் யாவும் 4 முதல் 40 அடிகள் கொண்டவையாக திகழ்கிறது. புறநானூற்றில் காணலாகும் உரிச்சொற்களின் பயன்பாட்டினை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

உரி என்பதற்கு உரிமை என்ற பொருளுண்டு. உரிச்சொல் பெயருக்கும் வினைக்கும் அடிச்சொல்லாகும் உரிமை உடையது; அவற்றுள் சேர்ந்து பொருள்தருவதற்கும் உரியது. இதன் பொருளாற்றலுக்கு இசை, குறிப்பு, பண்பு என்ற மூன்று தன்மைகள் காரணமாகின்றன. இத்தன்மைகளின் அடிப்படையில் உரிச்சொற்களில் ஒன்று பல பொருள் தருவனவும், ஒரு பொருளில் பலசொற்கள் வழங்குவனவும் உள்ளன (சுபஸ்ரீ, 2021). தொல்காப்பியத்தின் அடிப்படையில் 120 உரிச்சொற்கள் அதன் பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வில் 10 புறநானூறு பாடல்கள் உட்படுத்தப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்டுள்ள பாடல்களில் காணப்படும் உரிச்சொல்லை மட்டும் இவ்வாய்வு ஆராய்ந்துள்ளது.

ஆய்வு நோக்கம்

இந்த ஆய்வு புறநானூறு பாடல்களில் காணப்படும் உரிச்சொற்களையும் அவற்றின் பயன்பாடுகளையும் விளக்கிக் கூறுவதே நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆய்வு வரையறை

இவ்வாய்வில் 10 புறநானூறு பாடல்கள் உட்படுத்தப்பட்டுள்ளன. அவை 4, 36, 44, 53, 54, 80, 126, 140, 150 ஆகியவை ஆகும். இலக்கணக்கூறுகளில் உரிச்சொற்கள் மட்டும் ஆராயப்பட்டுள்ளன.

ஆய்விலக்கிய மீள்நோக்கு

புறநானூறு

புறநானூறு சார்ந்து ஆய்வுகள் சில ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கௌசல்யா லட்சுமி (2023), 'புறநானூறு காட்டும் ஆட்சி நெறிகள்' எனும் தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டுள்ளார். மேலும், க. நாகேந்திரன் (2022), 'புறநானூற்றில் இசைப் பொருள் உணர்த்தும் உரிச்சொல்' எனும் ஆய்வில் தொல்காப்பியர் கூறிய 8 இசைச்சார்ந்த பொருள் உணர்த்தும் உரிச்சொற்களை ஆராய்ந்துள்ளார்.

உரிச்சொற்கள்

பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் உரிச்சொல் இலக்கணக்கூறு குறித்து ஆய்வுகள் சில மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஞா. சுபஸ்ரீ (2021), 'திருமுருகாற்றுப்படையில் உரிச்சொற்கள்' என்கிற ஆய்வில் திருமுருகாற்றுப்படையில் காணலாகும் உரிச்சொற்களை நால்வகைப் பாகுபாட்டின்கண்ணும், மூவகைப் பொருண்மையின் அடிப்படையிலும் கண்டறிந்து அவை எத்தனை

இடங்களில் பயின்று வந்துள்ளது, அவ்வுரிச்சொற்குரிய பொருள் மற்றும் இலக்கியத் தொடர்கள் எவை என்பதனை ஆராய்ந்துள்ளார். தொடர்ந்து, கி. சங்கர நாராயணன் (2025), 'உ.வே.சா.வின் சங்க இலக்கிய உரைகளின் வழியாக அறியலாகும் உரிச்சொல்' என்ற தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டுள்ளார்.

ஆய்வு அணுகுமுறை

இஃது ஓர் பண்புசார் முறையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும். இந்த ஆய்வில் நூலாய்வு அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. நூலாய்வு அணுகுமுறையில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆகியவைத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து, ஆய்வின் முடிவில் சேகரிக்கப்பட்ட தரவுகள் அனைத்தும் விளக்கமுறை அணுகுமுறையில் விளக்கப்பட்டுள்ளது.

ஆய்வு கண்டுப்பிடிப்பும் கலந்துரையாடலும்

பாடல் 4 : தாயற்ற குழந்தை (பாடியவர் : பரணர் , திணை : வஞ்சி)

வாள், வலந்தர, மறுப் பட்டன
செவ் வானத்து வனப்புப் போன்றன!
தாள், களங்கொளக், கழல் பறைந்தன
கொல் ஏற்றின் மருப்புப் போன்றன;
தோல்; துவைத்து அம்பின் துனைதோன்றுவ, ... (05)

இந்த பாடல், போரின் கோரத்தையும் வீரர்களின் தியாகத்தையும் போரில் ஏற்படும் அழிவுகளையும் பற்றி சித்தரிக்கிறது. இப்பாடலில் தோல்; **துவைத்து** அம்பின் துனைதோன்றுவ என்ற வரியில் 'துவைத்து' என்ற உரிச்சொல் இடம்பெற்றுள்ளது. 'துவை' என்னும் உரிச்சொல் 'துளைக்கப்பட்டு' அல்லது 'பிளக்கப்பட்டு' என்ற பொருளில் வந்துள்ளது. அம்புகள் தோலைத் 'துளைத்து' ஊடுருவிச் சென்றதைக் குறிக்கின்றது.

பாடல் 36 : நீயே அறிந்து செய்க (பாடியவர் : ஆலத்தூர் கிழார், திணை : வஞ்சி)

கருங்கைக் கொல்லன் அரஞ்செய் அவ்வாய்
நெடுங்கை நவியம் பாய்தலின், நிலையழிந்து,
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக், காவுதொறும்
கடிமரம் தடியும் ஓசை தன்ஊர்
நெடுமதில் வரைப்பின் கடிமனை இயம்ப, ... [10]

இந்த பாடல், மன்னம் கிள்ளிவளவன் பகைவர் கோட்டையை முற்றுகையிட்டு, அதற்காகக் காவல் மரங்களை வெட்டி வீழ்த்தும் கொடுமையை விவரிக்கின்றது. இப்பாடலில் நெடுமதில் வரைப்பின் கடிமனை **இயம்ப** என்ற வரியில் 'இயம்ப' என்ற உரிச்சொல் இடம்பெற்றுள்ளது. 'இயம்ப' எனும் உரிச்சொல் 'ஒலித்தல்' என்ற பொருளில் வந்துள்ளது. 'கடிமனை இயம்ப' என்பது 'பாதுகாப்பு மிக்க வீடுகளிலும் (மரங்கள் வெட்டி வீழ்த்தப்படும்) ஓசை அரண்மனையிலே சேரனின் காதுகளில் ஒலித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பாடல் 44 : அறமும் மறமும் (பாடியவர் : கோவூர் கிழார் , திணை : வாகை)

பாலில் குழவி அலறவும், மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும், நீரில்
வினைபுனை நல்லில் இனைகூஉக் கேட்பவும்,

இன்னாது அம்ம, ஈங்கு இனிது இருத்தல்;
துன்னரும் துப்பின் வயமான் தோன்றல்! . . . . [10]

இந்த பாடல், மன்னன் போர் நடத்தி பகைவரைக் கொல்லும்போது, அறத்தை மறந்து செயல்படக்கூடாது என்பதை விவரிக்கின்றது. இப்பாடலில் துன்னரும் துப்பின் **வய**மான் தோன்றல்! என்ற வரியில் 'வயமான்' என்ற சொல்லில் 'வய' எனும் உரிச்சொல் இடம்பெற்றுள்ளது. 'வய' எனும் உரிச்சொல் 'வலிமை' என்ற பொருளைக் குறிக்கின்றது. அதாவது 'நெருங்குவதற்கு அரிய வலிமையையுடைய போர்த் தலைவனே' என்று மன்னனின் ஆற்றலையும் வீரத்தையும் அசைக்க முடியாத பலத்தையும் உணர்த்துகின்றது.

பாடல் 53 : செந்நாவும் சேரன் புகழும்! (பாடியவர் : பொருந்தில் இளங்கீரனார், திணை : வாகை)

செறுத்த செய்யுள் செய்செந் நாவின்,
வெறுத்த கேள்வி, விளங்குபுகழ்க் கபிலன்
இன்றுளன் ஆயின், நன்றுமன், என்ற நின்
ஆடு கொள் வரிசைக்கு ஒப்பப்
பாடுவன் மன்னால், பகைவரைக் கடப்பே . . . . [15]

இந்தபாடல்,சேரமன்னனின்கொடைத்திறனைப்போற்றுகிறது.புலவர்களையும்கலைஞர்களையும் ஆதரிப்பதில் கபிலன் போன்ற பெருங்கவிஞர்கள் போற்றும் அளவிற்குச் சிறந்தவன் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. இப்பாடலில் **வெறுத்த** கேள்வி, விளங்குபுகழ்க் கபிலன் என்ற வரியில் 'வெறுத்த' எனும் உரிச்சொல் இடம்பெற்றுள்ளது. 'வெறுத்த' என்ற சொல் 'வெறிப்பு' என்ற உரிச்சொல்லாகி 'செறிவு' என்ற பொருளைக் குறிக்கின்றது. ஆக 'வெறுத்த கேள்வி' என்பது அறிவால் செறிந்த கபிலன்கனைக் குறிக்கிறது.

பாடல் 54 : எளிதும் கடிதும்! (பாடியவர் : கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் , திணை : வாகை)

எங்கோன் இருந்த கம்பலை முதூர்,
உடையோர் போல இடையின்று குறுகிச்,
செம்மல் நாளவை அண்ணாந்து புகுதல்
எம்அன வாழ்க்கை இரவலர்க்கு எளிதே;
இரவலர்க்கு எண்மை யல்லது; புரவு எதிர்ந்து . . . . [05]

இந்த பாடல், மன்னனின் கொட்டைத்திறமையையும், அவன் எளிதில் அணுகக்கூடியவன் என்பதையும் அவனுடைய அரசவையில் யாசகர்கள் எந்தவிதத் தடையுமின்றிச் சென்று பரிசில் பெற முடியும் என்பதையும் வள்ளல் தன்மையையும் விவரிக்கின்றது. இப்பாடலில் எங்கோன் இருந்த **கம்பலை** முதூர் என்ற வரியில் 'கம்பலை' என்ற உரிச்சொல் இடம்பெற்றுள்ளது. 'கம்பலை' என்ற உரிச்சொல் 'ஆரவாரம்' என்ற பொருளில் வந்துள்ளது. அதாவது மன்னன் வீற்றிருக்கும் அவையிலும் ஊரிலும் எப்போதும் மக்கள் புழக்கத்தாலும், செயல்பாடுகளாலும் ஆரவாரம் நிறைந்திருப்பதைக் குறிக்கின்றது.

பாடல் 80 : காணாய் இதனை (பாடியவர் : சாத்தந்தையார் , திணை : தும்பை)

இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்,
மைந்துடைமல்லன் மதவலி முருக்கி,
ஒருகால் மார்பொதுங் கின்றே; ஒருகால்
வருதார் தாங்கிப் பின்னெதுங் கின்றே;
நல்கினும் நல்கான் ஆயினும், வெல்போர்ப் . . . . [05]

இந்த பாடல், ஒரு வீரன் போர்க்களத்தில் எதிரியுடன் நேருக்கு நேர் மோதி, தனது மிகுந்த வலிமையையும், வீரத்தையும் பயன்படுத்திப் போரிடும் காட்சியையும் அவனது தன்னம்பிக்கையையும் விவரிக்கின்றது. இப்பாடலில் மைந்துடைமல்லன் **மத**வலி முருக்கி, என்ற வரியில் 'மதவலி' எனும் சொல்லில் 'மத' என்ற உரிச்சொல் இடம்பெற்றுள்ளது. 'மத' என்ற உரிச்சொல் 'மிகுதி' என்ற பொருளில் வந்துள்ளது. 'மதவலி' என்பது மிகுந்த வலிமை என்ற பொருளைக் குறிக்கின்றது. அதாவது வலிமையுடைய மல்லன் தனது மிகுதியான வலிமையால் பகைவரை அழிக்கும் சிறப்பைக் காட்டுகிறது.

பாடல் 126 : கபிலனும் யாமும்! (பாடியவர் : மாறோக்கத்து நப்பசலையார் , திணை : பாடாண்)

நின்வயிற் கிளக்குவம் ஆயின், கங்குல்
துயில்மடிந் தன்ன தூங்கிருள் இறும்பின்,
பறை இசை அருவி, முள்ளூர்ப் பொருநர்
தெறலரு மரபின் நின் கிளையொடும் பொலிய,
நிலமிசைப் பரந்த மக்கட்டு எல்லாம் . . . . [10]

இந்த பாடல், மலையமான் திருமுடிக்காரியின் சிறப்புகளையும் அவனது முள்ளூர் ஊரின் பெருமையையும் அங்குள்ள வீரர்களின் ஆற்றலையும் விவரிக்கின்றது. இப்பாடலில் பறை **இசை** அருவி, முள்ளூர்ப் பொருநர் என்ற வரியில், 'இசை' என்ற உரிச்சொல் இடம்பெற்றுள்ளது. இசை என்ற உரிச்சொல் [music] என்ற பொருளைத் தாண்டி, இங்கு 'இசை' என்ற உரிச்சொல் 'இசைத்தல்' என்ற பொருளில் வந்துள்ளது. அதாவது, அருவிகளின் இரைச்சல் ஓசை; போர்க்களத்தில் முழங்கும் பறையின் ஓசையைப் போல வலிமையாகவும், கம்பீரமாகவும் இருந்தது என்பதை உணர்த்துகின்றது.

பாடல் 140 : தேற்றா ஈகை (பாடியவர் : ஔவையார், திணை : பாடாண்)

தடவுநிலைப் பலவின் நாஞ்சில் பொருநன்
மடவன், மன்ற; செந்நாப் புலவீர்!
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை ஆக யாம் சில
அரிசி வேண்டினெம் ஆகத், தான் பிற . . . . [05]

இந்த பாடல், நாஞ்சில் வள்ளுவனின் அளவற்ற கொடைத்திறனைப் போற்றி விவரிக்கின்றது. இப்பாடலில் **தட**வுநிலைப் பலவின் நாஞ்சில் பொருநன் என்ற வரியில் 'தட' என்ற உரிச்சொல் இடம்பெற்றுள்ளது. 'தட' என்னும் அகரவீற்று உரிச்சொல் தடவுநிலையென உகரம் பெற்று வந்துள்ளது. 'தட' என்ற உரிச்சொல் இப்பாடலில் பெரிய என்ற பொருளை உணர்த்துகின்றது. அதாவது பெரிய அடிமரங்களைக் கொண்ட பலா மரங்கள் நிறைந்த நாஞ்சில் நாட்டு மலை வேந்தன் என்று தலைவனின் கொடைத்திறன் போற்றி பாடப்படுகிறது.

பாடல் 150 : நளி மலை நாடன்! (பாடியவர் : வன் பரணர், திணை : பாடாண்)

அம்மலை காக்கும் அணிநெடுங் குன்றின்
பளிங்கு வகுத் தன்ன தீநீர்,
நளிமலை நாடன் நள்ளிஅவன் எனவே. [28]

இந்த பாடல், நள்ளியின் கொடைத்தன்மை, வீரம், நாட்டின் வளம் ஆகியவற்றை மறைமுகமாகப் புகழ்வதை விவரிக்கின்றது. இப்பாடலில், **நளி**மலை நாடன் நள்ளிஅவன் எனவே என்ற வரியில் 'நளி' என்ற உரிச்சொல் இடம்பெற்றுள்ளது. 'நள்' எனும் உரிச்சொல் பெருமை பொருளை இங்கு உணர்த்துகிறது. அதாவது, நள்ளியின் நாடானது அழகிய மலைகளையும், தூய நீர் வளத்தை கொண்டதாகவும் அமைகின்றது. இவை அனைத்திற்கும் பெருமை பொருந்திய மலையை உடைய நாட்டை ஆளும் நள்ளி என்பவன் உலகறிய இருக்கிறான் என்பதைக் குறிக்கின்றது.

பாடல் 159 : கொள்ளேன்! கொள்வேன்! (பாடிவர் : பெருஞ்சித்திரனார், திணை : பாடாண்)

பசந்த மேனியொடு படர்அட வருந்தி,
மருங்கில் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய முலையள், பெரிது அழிந்து,
குப்பைக் கீரைக் கொய்கண் அகைத்த
முற்றா இளந்தளிர் கொய்துகொண்டு, உப்பின்று, ... [10]

இந்த பாடல், புலவர் குடும்பத்தின் வறுமை நிலையையும், பசியின் கொடுமையையும் விவரிக்கின்றது. இப்பாடலில் பசந்த மேனியொடு **படர்**அட வருந்தி என்ற வரியில் 'படர்' என்ற உரிச்சொல் இடம்பெற்றுள்ளது. 'படர்' என்ற உரிச்சொல் உள்ளுதல் (மனதில் தோன்றல்) என்ற பொருளை இங்கு உணர்த்துகிறது. அதாவது, வறுமை, குழந்தைகளின் பசி போன்றவற்றை கண்டு மனதுக்குள் ஏற்படும் ஆழமான துன்பத்தை இவ்வுரிச்சொல் உணர்த்துகிறது.

முடிவுரை

இந்த ஆய்வில், புறநானூற்றுப் பாடல்களில் இடம்பெற்றுள்ள உரிச்சொற்களின் பயன்பாடு குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளன. புறநானூறில் உரிச்சொற்கள் பயன்பாடு குறித்த பாடல்கள் இன்னும் பல உள்ளன. சங்க இலக்கியத்தில் உரிச்சொற்கள் வெறும் அலங்காரச் சொற்களாக இல்லாமல், கவிஞர்கள் தங்கள் கருத்துகளை நுட்பமாக வெளிப்படுத்தப் பயன்படுத்தும் கருவியாக அமைகின்றது.

துணைநூற்பட்டியல்

Kawselya Lechumy. (2023). Rules of Governance Shown in Purananuru: புறநானூறு காட்டும் ஆட்சி நெறிகள். Malaysian Journal of Tamil (மலேசியத் தமிழ் ஆய்விதழ்), 1(1), 74–78. https://doi.org/10.1315/mjt.v1i1.24

N. Subashree. (2021). Tirumurukāṟṟuppaṭaiyil uriccoṟkaḷ [Function of adjectives in Tirumurukāṟṟuppaṭai]: திருமுருகாற்றுப்படையில் உரிச்சொற்கள். Muallim Journal of Social Sciences and Humanities, 6(1), 74-81. https://doi.org/10.33306/mjssh/179

கி. சங்கர நாராயணன் (2025), 'உ.வே.சா.வின் சங்க இலக்கிய உரைகளின் வழியாக அறியலாகும் உரிச்சொல்'. தமிழ் பண்பாடு மற்றும் இலக்கிய ஆய்விதழ், 35 – 40.

Vee. Designs. (2019). Sangailakkiyam. http://www.sangathamizh.com/8thokai/8thokai-purananooru.html

Sangam Poetry. (2012), Vaidehi's Sangam Tamil Poetry Translations. https://sangamtranslationsbyvaidehi.com

புறநானூறு (மூலமும் உரையும்) (1st ed., Vol. 505). (2010). சாரதா பதிப்பகம். https://www.tamilvu.org/library/nationalized/pdf/59-puliyurkesigan/010.purananuru.pdf